# EPS (தொழில் அனுமதிப்பத்திரம்) இன் கீழான தேர்ச்சி பரீட்சை பற்றிய அறிவித்தல்

EPS - TOPIK பரீட்சையில் சித்தியடைந்தோருக்கு EPS இன் கீழ் உற்பத்தி கைத்தொழிலுக்காக இலங்கையில் முதலாவது தேர்ச்சி பரீட்சை நடாத்தப்படவுள்ளது. பரீட்சையில் பங்குகொள்ள விரும்புவோர் பின்வருமாறு பரீட்சைக்கு விண்ணப்பிக்க முடியும்

**2011 ஒக்டோபர் 28 ஆம் திகதி**

கொரிய குடியரசின் வேலைவாய்ப்பு மற்றும் தொழில் அமைச்சினால் **மேற்பார்வை செய்யப்பட்டது**

கொரிய மனித வள அபிவிருத்தியினால் **நிருவாகிக்கப்பட்டது**

வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு மற்றும் நலனோம்புகை அமைச்சு, இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் என்பற்றினால் **ஒத்துழைப்பு வழங்கப்பட்டது.**

1. **பரீட்சை விண்ணப்பத்திற்கான கைத்தொழில் வகை : தயாரிப்பு**

2. **தகைமை**

   **அ. 8 வது EPS –TOPIK இல் 172 புள்ளிகள் அல்லது அதற்கு மேற்பட்ட புள்ளிகளை பெற்றவர்கள் (மொத்த புள்ளிகள் - 200 புள்ளிகள்) (பெறுபேறு 2010 நவம்பர் 18 ஆந் திகதியன்று அறிவிக்கப்பட்டது)**

   **ஆ. 9 வது EPS –TOPIK இல் 172 புள்ளிகள் அல்லது அதற்கு மேற்பட்ட புள்ளிகளை பெற்றவர்கள் (மொத்த புள்ளிகள் - 200 புள்ளிகள்) (பெறுபேறு 2011 ஒக்டோபர் 28 ஆந் திகதியன்று அறிவிக்கப்பட்டது)**

   ※ கொரியாவுக்கு சென்றோர், தொழில் விண்ணப்பத்தை கைவிட்டோர் (குடியகல்வு) மற்றும் வீசா வழங்குகையின் உறுதிப்படுத்தலுக்கான சான்றிதழை பெறுவதற்கு அனுமதிக்கப்படாதோர் பதிவுசெய்தல் சாத்தியப்பாட்டிலிருந்து விலக்கப்படுகின்றனர் (CCVI)

3. **பதிவுசெய்தல்**

   அ. பதிவுக் காலம்: 1- 3, நவம்பர் 2011 (3 நாட்களுக்கு)

   **※ பதிவு நேரம் 09:00-18:00 (மதியபோசன நேரம் : 12:00-13:00)**

   ஆ. பதிவுசெய்யும் இடம் : **இ.வெ.வே.ப. அலுவலகம்**

   இ. பதிவு முறைமை: தனிப்பட்ட விஜய பதிவு அல்லது தொலைபேசி பதிவு

   ஈ. தேவையான ஆவணங்கள்: அடையாள அட்டை அல்லது EPS -TOPIK அனுமதிச் சீட்டு

**உ. பரீட்சைக் கட்டணம்: இலவசம்**

**4. ஓவ்வொரு விண்ணப்பதாரிக்குமான பரீட்சை திகதி/நேரம், பரீட்சை இடம் என்பவற்றை அறிவித்தல்**

அ. அறிவித்தல் திகதி : 23, நவம்பர் 2011

ஆ. அறிவித்தல் முறை

- இ.வெ.வே ப. துண்டுப்பிரசுர பலகை
- இ.வெ.வே.ப .இணையத்தளம்(http://www.slbfe.lk)

இ. (எதிர்பார்க்கப்படும்) பரீட்சை திகதி: 3 - 9, டிசம்பர் 2011 காலப்பகுதியில் **(திகதி மாற்றமடைய முடியும்)**

**5. பரீட்சை பெறுபேற்றின் அறிவிப்பு**

**அ. திகதி : 20, டிசம்பர் 2011 (செவ்வாய்)**

**ஆ. முறைமை**

- EPS (http://www.eps.go.kr), இணையத்தளத்திற்கு வியஜம்செய்து "பல்மொழி வகை" ஐ சொடுக்குக
- பதிவுசெய்க
- பரீட்சை பெறுபேற்றை தனிப்பட்டரீதியாக சரிபார்க்க

**6. அதிக புள்ளிகள் மற்றும் சமூகமளிப்போருக்கான விசேட நன்மைகள்**

அ. மிகக்கூடிய புள்ளிகளைப் பெற்றவர்கள் கொரிய தொழில்வழங்குநர்களுக்கான ஆரம்ப தொழில் சிபாரிசின் பிரகாரம் முன்னுரிமை வழங்கப்படுவர் (மூன்று தடவைகளுக்கு)

ஆ. தேர்ச்சி பரீட்சைக்கு சமூகமளித்தோர் கொரிய தொழில்வழங்குநர்களுக்கான இரண்டாம்நிலை தொழில் சிபாரிசின் பிரகாரம் முன்னுரிமை வழங்கப்படுவர் (மூன்று தடவைகளுக்கு)

இ. மிகக்கூடிய புள்ளியீட்டலுக்கான தேவைப்பாடு: மொத்தப் புள்ளிகளில் 240 மேற்பட்டதை பெறுக. அனைத்து பகுதிகளிலும் 40 மேற்பட்ட புள்ளிகளை பெறுக.

**7. தேர்ச்சி பரீட்சை முறைமையும் விபரங்களும்**

**அ. தேர்ச்சி பரீட்சையின் உள்ளடக்கமும் ஒதுக்கப்பட்ட புள்ளிகளும்**

- தேர்ச்சி பரீட்சையானது உடலியல் பரீட்சை, தொழில் அனுபவத்தை மதிப்பிடலும் நேர்காணலும் மற்றும் அடிப்படை திறன் பரீட்சை உள்ளிட்ட மூன்று பகுதிகளை உள்ளடக்கியதாகும்.

**ஆ. புள்ளி வழங்கல்**

| மோத்தப் புள்ளிகள் | உடலியல் பரீட்சை | நேர்காணல் மதிப்பீடு | அடிப்படை திறன் பரீட்சை | குறிப்புக்கள் |
|---|---|---|---|---|
| 300 | 100 | 100 | 100 | |

## 8. உடலியல் பரீட்சையின் பணி உள்ளடக்கங்கள்

| சோதனை வகைகள் | விபரங்கள் | குறிப்புக்கள் |
|---|---|---|
| அடிப்படை நடமாட்டம் | விரிந்த கைகளுடன் உயரப் பாய்தல் : தொடராக 5 தடவைகள் | |
| தொடர்ந்நிருத்தல் | தொடராக டிப்ஸ் (1 நிமி) எண்ணிக்கைய அளவிடல் | |
| ஈர்த்தல் சக்தி | ஒரு அளவீட்டு கருவியொன்றை பயன்படுத்தி (கிலோகிராமில்) ஒவ்வொரு கைக்குமான ஒரு தடவையில் கை ஈர்த்தல் சக்தியை அளவிடுக | |
| நெகிழ்ச்சித்தன்மை | ஒரு அளவீட்டு கருவியை பயன்படுத்தி (சென்றிமீட்டரில்) மேல் உடல் வலைவு அமர்வை அளவிடுக | |
| பின் தசை பலம் | ஒரு அளவீட்டு கருவியொன்றை பயன்படுத்தி (கிலோகிராமில்) பின் தசை பலத்தை ஒரு முறை அளவிடுக | |

## 9. நேர்காணல் மதிப்பீட்டின் பணி உள்ளடக்கங்கள்

| மதிப்பீட்டு விடயங்கள் | மதிப்பீட்டு விபரங்கள் | குறிப்புக்கள் |
|---|---|---|
| அடிப்படை தொடர்பாடல் | கொரிய மொழியில் அடிப்படை தொடர்பாடல் திறன்கள் | நேர்காணல் படமெடுக்கப்பட்டு(30 செக்கன்களுக்கு) கொரிய தொழில் வழங்குநர்களுக்கு வழங்கப்படும். |
| வசனங்களை வாசித்தல் | கொரிய மொழியில் நான்கு அல்லது ஐந்து வசனங்களை வாசித்தல் | |
| ஒழுங்குமுறைகளை புரிந்துகொள்ளல் | கொரிய மொழியின் அடிப்படை ஒழுங்குமுறைகளை புரிந்து கொள்ளல் | |
| தொழில் அனுபவம் | தொழில் அனுபவமும் வேலைவாய்ப்பு காலமும் | |
| ஆளுமையும் திறனும் | மனோபாவம், சாதகத்தன்மை, தயார்நிலை முதலியன | |

## 10. அடிப்படை திறன் பரீட்சை உள்ளடக்கம்

| மதிப்பீட்டு விடயங்கள் | மதிப்பீட்டு விபரங்கள் | குறிப்புக்கள் |
|---|---|---|
| கருவியின் பெயரை குறிப்பிடுதல் | கருவியின் பெயர் பற்றிப் பேசுதல் (3 வினாக்கள்), செவிமடுத்தலும் காணுதலும் (3வினாக்கள்) | |
| பலகையில் குச்சிகளை இடுதல் | வேறுபட்ட குச்சிகளை பலகையில் இடுதல் (பல்வேறு நிறம், வடிவம், அளவு குச்சிகள்) | |
| பொருட்களை கையாளுதலும் தொங்கவிடலும் | சரியான இடத்தில் பல்வேறு அளவுகளின் வலையங்களை தொங்கவிடுதல் | |
| பொருட்களை ஏற்றுதல் | பலகையில் பணி மாதிரியின் துண்டுகளை ஒன்றாக வைத்தல் | |

## 11. விண்ணப்பதாரிகளுக்கான அறிவுறுத்தல்கள்

அ. ஒவ்வொரு விண்ணப்பதாரிக்குமான பரீட்சை திகதியும் இடமும் 2011 நவம்பர் 23 ஆந் திகதி (புதன்) அறிவிக்கப்படும். குறிப்பிட்ட திகதியில் தயவுசெய்து அறிவித்தலை பார்க்க

ஆ. நீங்கள் குறிப்பிட்ட பரீட்சை திகதியையோ, இடத்தையோ மாற்ற முடியாது அத்துடன் குறிப்பிட்ட நுழைவு நேரத்தின் பின்னர் எவரும் இடத்திற்கு நுழைவதற்கு அனுமதிக்கப்படமாட்டார். குறிப்பிட்ட நுழைவு நேரத்தின் பின்னர் வருவோருக்கு அனுமதி கிடையாது.

இ. தமது அடையாள அட்டையை (கடவுச்சீட்டு) மற்றும் அனுமதிப் பத்திரம் என்பவற்றை கொண்டுவராதோருக்கு அனுமதி இல்லை.

ஈ. பரீட்சைக்கான கருவிகளும் சாதனங்களும் இவ்விடத்தில் வழங்கப்படும். எனவே விண்ணப்பதாரி எந்தவொரு கருவியையோ அல்லது சாதனத்தையோ கொண்டுவர வேண்டிய அவசியம் இல்லை. (அடையாள அட்டை மற்றும் அனுமதிச்சீட்டு தவிர்ந்த)

உ. பரீட்சையன் போது உங்களது பாதுகாப்புக்கு நீங்கள் விசேட கவனம் செலுத்தும்படி நாம் ஆலோசனை கூறுகின்றோம். உங்களது கவனயீனத்தினால் ஏற்படுகின்ற எந்தவொரு விபத்துக்கும் முற்றாக நீங்களே பொறுப்பானவர்கள்.

ஊ. தேர்ச்சி பரீட்சையில் எவ்வித அசௌகரியத்தையும் தராத வசதியான மற்றும் நேர்த்தியான ஆடைகள் அணிவது சிபாரிசுசெய்யப்படுகின்றது.

எ. பரீட்சையின் போது ஏமாற்றுதல் நடந்தால் நீங்கள் பூச்சிய புள்ளியையே பெறுவீர்கள்.

ஏ. இத்துடன் அறிவிக்கப்பட்ட பணி அறிவுறுத்தல்களின் உள்ளடக்கத்தை தயவுசெய்து சரிபார்க்க. பரீட்சையின் மூலம் சிறந்த பெறுபேறை பெறுவதற்கு தயாராகுங்கள்.

ஒ. EPS – TOPIK இல் சித்தியடையும் அனைவருக்கும் தமது தேர்ச்சி பரீட்சை பெறுபேறுகளை கருத்திற்கொள்ளாது தொழிலொன்றுக்கு விண்ணப்பிக்க முடியும். பரீட்சையின் போது வீடியோ படமெடுக்கப்பட்டவை குறிப்பொன்றாக கொரிய தொழில்வழங்குநர்களுக்கு வழங்கப்படும்.